TAMIL NADU LEGISLATURE
5 MAY 19
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1972 பிப்ரவரி 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள **சட்டப் பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

நேபாள மன்னர் திரு. மகேந்திரா அவர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது அண்டை நாடான நேபாளத்தின் மன்னர் திரு. மகேந்திரா அவர்கள் நேற்றையதினம் (31—1—1972) மறைந்த செய்தியை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தியாவின் வடபுலத்தில் நம் நாட்டுடன் நட்புரிமையுடன் இருந்து நம்முடன் வாணிபம், கலாசாரம் முதலியவற்றில் தொடர்பு கொண்டு இயங்கிவரும் நாடுகளில் நேபாளமும் ஒன்றாகும். அந்நாட்டு மன்னரின் மறைவுக்கு இப்பேரவையின் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் நாம் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 211 முதல் 215 வரை எண்ணுள்ள வினாக்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி, தள்ளிவைக்கப்படுகின்றன.

Posts of Civil Surgeons in the Office of Director of Medical Services.

*** 228 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—**

(a) whether a number of posts of Civil Surgeons in the Office of the Director of Medical Services have been vacant for many months now;

(b) if so, the details thereof; and

(c) the reasons therefor?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தற்சமயம் எந்தப் பதவியும் அந்த அலுவலகத்தில் காலியாக இல்லை.

(இ) & (உ) இக் கேள்விக்கு இடமில்லை.